பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 61 நாள்: 04.06.2017

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்பு மற்றும் விழா நடைபெற உள்ளது.

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் மற்றும் வார்டு அலுவலகங்களிலும் பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் தன்னார்வ அமைப்பினர் ஆகியோருடன் காலை 9.00 மணிக்கு குப்பைகளை பிரித்தளிப்பதற்கான உறுதிமொழி ஏற்கப்படும்.

## குப்பைகளை பிரித்தளிப்பதற்கான உறுதிமொழி

நான் தூய்மை இந்தியா திட்டத்தை ஆதரிக்கும் வகையில் குப்பைகளை வீடு, கடைகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து மட்கும் குப்பை, மட்காத குப்பை என தரம் பிரித்து, மட்கும் குப்பையை பச்சை நிறக் குப்பைத் தொட்டியிலும், மட்காத குப்பையை நீல நிற குப்பைத் தொட்டியிலும் கொடுப்பேன் என்று உறுதி அளிக்கிறேன்.

## PLEDGE FOR SOURCE SEGREGATION OF WASTE

I Pledge to segregate my Household, Shops and Establishments waste in two dustbins, wet waste in Green and dry waste in Blue, as my contribution to the Swachh Bharath Mission.

அதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் ஆகியோர் தலைமையில்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சுற்றுச்சூழல் தின விழா நடைபெற உள்ளது. விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலை 11.30 மணிக்கு சுற்றுச்சூழல் தின உறுதிமொழியினை ஏற்று வைத்து, 25 துப்புரவு பணியாளர்களுக்கு மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் பொதுமக்கள் தங்கள் இல்லங்களிலேயே குப்பைகளை பிரித்து வழங்குவதற்காக 3000 (1500 செட்) எண்ணிக்கையிலான நீலம் மற்றும் பச்சை நிறக் கூடைகளை வழங்கி விழா பேருரை ஆற்றவுள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**